தினமலர்
புதுச்சேரி | செவ்வாய் | 8.10.2024

# ஜிப்மரில் பிஎச்.டி., படிப்பு விண்ணப்பிக்க அறிவிப்பு

**புதுச்சேரி, அக். 8–**

ஜிப்மரில், பிஎச்.டி., படிப்புகளில் சேர, ஆன் லைன் மூலம் விண்ணப் பிக்கலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இதுகுறித்து, ஜிப்மர் மருத்துவக் கல்லூரி (அகா டமி) டீன் அலுவலக செய் திகுறிப்பு:

புதுச்சேரி ஜிப்மர் மருத் துவக் கல்லூரியில், பிஎச். டி., படிப்பில் உயிர் வேதி யியல் 3, மருத்துவ புற்று நோயியல் 1, மகப்பேறி யல் 1, என 5 இடங்கள் உள்ளன. இந்த இடங்கள், ஆண்டுதோறும் ஆன் லைன் நுழைவுத்தேர்வு மூலம் நிரப்பப்படுகிறது.

2024ம் ஆண்டு பிஎச். டி., படிப்புக்கான சேர்க் கைக்கு, ஆன்லைனில் வரும் 15ம் தேதி மாலை 4:30 மணி வரை, www. jipmer.edu.in இணைய தளத்தில் விண்ணப்பிக் கலாம்.

நுழைவுத் தேர்வுக்கான ஹால்டிக்கெட்டை, 19ம் தேதி முதல், 23ம் தேதி வரை, ஜிப்மர் இணை யதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். நுழைவுத்தேர்வு ஆன்லை னில் வரும் 23ம் தேதி மதி யம் 2:00 மணி முதல் 3:30 மணி வரை நடக்கிறது.

இந்த தேர்வு முடிவு டன், தற்காலிக தகுதி பட் டியல், நவ., 7ம் தேதிக்கு முன்பாக வெளியிடப் படும். நுழைத்தேர்வு மற் றும் சேர்க்கை தொடர்பாக சந்தேகங்களுக்கு, 0413 2298288, 2296106 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.